கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு

வாக்குமூல படிவம்

OS.No. 254/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ஸ்ரீமான்சிங்காரம் | வா.சா : | 1 |
| த/க/பெயர் : | நடராஜன் | தொழில் : | டிரைவர் |
| ஊர் : | நெருப்பெருச்சல் | தாலுக்கா : | திருப்பூர் |
| வயது : | 51 | நாள் : | 24.06.2025 |

சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

1. நான் ஆறாம் வகுப்பு படித்துள்ளேன். நான் கார் டிரைவராக வேலை பார்க்கிறேன். நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால்? திருப்பூரில் உள்ளேன். நான் 20 ஆண்டுகளாக திருப்பூரில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள அடமானப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீரம்மாள் என்பவர் எனக்கு தாயார் ஆவார். எனது தாயார் குமாரபாளையத்தில் குடியிருந்தார் என்றால்? சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 11.09.2014ம் தேதியில் ரூ.3 லட்சம் கடனாக கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால்? சரிதான். 11.09.2014ம் தேதியில் ரூ.3 லட்சம் கடனாக கொடுத்த விவரத்தை நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ3 ஆவணத்தில் சொல்லவில்லை என்றால்? சரியல்ல, அதில் உள்ளது.

2. நான் சொல்வது தவறு என்றாலும், மேற்சொன்ன 11.09.2014ம் தேதியில் ரூ.3 லட்சம் கடன் கொடுக்கப்பட்டது என்ற விவரம் வா.சா.ஆ3 ஆவணத்தில் இல்லை என்றாலும்? சரியல்ல. வா.சா.ஆ3 ஆவணத்தில் கடனை திருப்பி செலுத்த கூடிய காலம் 4 வருடங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்? சரிதான். மேற்சொன்னவாறு 4 ஆண்டுகளுக்குள் கடனை திருப்பி செலுத்தவில்லை என்றால், உரிமையியல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்ற விவரம் வா.சா.ஆ3 ஆவணத்தில் உள்ளது என்றால்? அதுப்பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் 3 மாத காலத்திற்குள் வட்டி செலுத்தவில்லை என்றால், சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்? அந்த விவரம் எனக்கு தெரியாது.

3. வா.சா.ஆ3 அடமானப்பத்திரத்தில் எனது தாயார் கையொப்பம் போடவில்லை என்றால்? இல்லை. வா.சா.ஆ3 ஆவணம் எழுதப்படும் சமயத்தில் நானும் உடன்

இல்லை என்றால்? சரிதான். வா.சா.ஆ3 ஆவணம் சம்பந்தமாக எனது தாயார் அசல் வழக்கு எண். 212/2023 என்ற உரிமையியல் வழக்கு இதே நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால்? சரிதான். வா.சா.ஆ3 ஆவணம் எழுதப்பட்ட ஆண்டு 2014 என்றால்? சரிதான். ஆனால் அந்த ஆவணம் சம்பந்தமான வழக்கு 2023ம் ஆண்டில் தான் தொடரப்பட்டது என்றால்? சரிதான். தற்பொழுது எனது தாயார் உயிருடன் இல்லை என்றால்? சரிதான். எனது தாயார் இறந்த தேதி 16.05.2023.

4. எனது தாயார் தாக்கல் செய்த அ.வ.எண். 212/2023 வழக்கில் இன்றைய தேதி வரை எனது தாயாரின் வாரிசுகள் என்ற முறையில் நான் அந்த வழக்கை எடுத்து நடத்த எந்தவிதமான முயற்சிகளையும் எடுக்கவில்லை என்றால்? சரியல்ல, எடுத்துள்ளேன். வா.சா.ஆ1 ஆவணத்தின் தலைப்பில் சுவாதீனம் இடப்படாத கிரைய ஒப்பந்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்? சரிதான். அந்த ஆவணத்தின் 2வது பக்கத்தில் 3வது பாராவில் ரூ.4லட்சம் ரூபாய்க்கு விலை பேசி 2 லட்சம் ரூபாய் அட்வான்ஸ்சாக பெறப்பட்டது என்று எழுதப்பட்டிருந்தால்? சரிதான். மேற்சொன்ன கிரைய ஒப்பந்தத்தில் இரண்டு வருட காலக்கெடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்? சரிதான்.

5. வா.சா.ஆ1 ஆவணத்தில் எந்த பக்கத்திலாவது ரூ.2 லட்சம் கடனாக கொடுக்கப்பட்டது என்ற வாசகம் இல்லை என்றால்? சரிதான். மேற்படி தொகைக்கு வட்டி கொடுக்கப்பட வேண்டும் என்ற விவரம் வா.சா.ஆ1 ஆவணத்தில் இல்லையென்றால்? சரிதான். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளவாறு, கடன் தொகை என்ற விவரம் எதுவும் வா.சா.ஆ1 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால்? சரிதான். வா.சா.ஆ1 ஆவணம் பிணையத்திற்காக எழுதி பெறப்பட்ட ஆவணம் என்றால்? சரியல்ல. நான் சொல்வது போல் வழக்கு விவரங்கள் உண்மையாக இருக்கும் பட்சத்தில் வா.சா.ஆ1 ஆவணம் தொடர்பாக உரிய காலத்திற்குள் பிரதிவாதிகள் மீது நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும், உரிய நேரத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால்? சரியல்ல.

6. எனது தாயார் குமாரபாளையத்தில் குடியிருக்கும்போது வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வந்தாரா என்றால்?ஆமாம். எனது தாயார் குடியிருக்கும் பகுதியில் எனது தாயாருக்கு கந்துக்காரம்மாள் என்ற பெயர் உள்ளது என்றால்? சரிதான்.

எனது தாயார் பொருட்களை வாங்கிக்கொண்டு பணம் கொடுப்பார் என்றால்? சரிதான். எனது தாயார் பணம் கொடுத்த வகையில் ரூ.50 ஆயிரம் தொகையை பிரதிவாதிகள் கடன் வாங்கியிருந்தார்கள் என்றால்? சரியல்ல, ரூ.3 லட்சம் வாங்கியிருந்தார்கள். பிரதிவாதிகளின் அறியாமையை பயன்படுத்தி எனது தாயார் பிரதிவாதிகளிடமிருந்து வா.சா.ஆ3 ஆவணத்தை அடமானமாக எழுதி பெற்றுக்கொண்டார் என்றால்? சரியல்ல. பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் வா.சா.ஆ3 அடமானப்பத்திரம் நடைமுறைக்கு வரவில்லை என்றால்? சரியல்ல.

7. அடமானம் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் சொத்தில் பிரதிவாதிகள் தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால்? சரிதான். அடமானம் எழுதிய தேதியிலிருந்து 10 நாட்களுக்குள்ளேயே வா.சா.ஆ1 ஆவணமான கிரைய உடன்படிக்கை பத்திரத்தை எனது பெயருக்கு ஏற்படுத்திக்கொடுத்ததாக சொல்வது பொய் என்றால்? சரியல்ல. பிணையத்திற்காக எழுதப்பட்ட காரணத்திற்காகத்தான் அசல் ஆவணங்களை வாங்கி எங்கள் பொறுப்பில் வைத்துள்ளோம் என்றால்? மேற்படி சாட்சி ஒவ்வொரு கேள்விக்கும் மௌனம் காத்து பின்னிட்டு பதில் அளிக்கிறார், மேற்சொன்ன கேள்விக்கு பதில் அளிக்கவில்லை.

8. எனது தாயார் குமாரபாளையத்தில் குடியிருந்தபோது எனக்கும், எனது தாயாருக்கும் போக்குவரத்து இல்லையென்றால்? போக்குவரத்து இருந்தது. எனது மனைவி அடிக்கடி வந்து எனது தாயாரை பார்த்து செல்வார் என்றால்? சரிதான். எனது மனைவி அடிக்கடி வந்து பார்ப்பதால் எனது மனைவிக்கு தான் எனது தாயார் யார், யாருக்கு எவ்வளவு தொகை கொடுத்தார் என்ற விவரம் தெரியும் என்றால்? சரிதான். எனது மனைவி தான் வா.சா.ஆ1 கிரைய ஒப்பந்த உடன்படிக்கை ஆவணத்தை ஏற்பாடு செய்தார் என்றால்? சரிதான், நானும் உடன் இருந்தேன்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

Sd/- D. Mohankumar,
Additional Subordinate Judge,
Tiruchengode.